343 143

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௨] யுவ வருஷ சித்திரைமீ [பகுதி-௬.
Vol. XXXII. April-May 1935. No. 6.

உள்ளுறை.

| | | | |
|---|---|---|---|
| பிரயப்பிரவேச மணிமேகலை:— | பத்திராசிரியர் | | ௧௫௨—௧௬0 |
| குரு திருத்தம்:— | ,, | | ௧௬0 |
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:- | ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C. | | ௧௬௧—௧௬௪ |
| சாத்தனார்கோயில்கள்:— | ,, | வை. சுந்தரேசவாண்டையார் | ௧௬௫-௧௬௮ |
| காலம்:— | ,, | வித்வான் K. S. விஸ்வநாத சாஸ்த்ரியார் P. O. L. | ௧௬௯—௧௭௮ |
| வாழ்த்து முதலியன:— | ,, | தெ. ரா. பதுமநாபையர் | ௧௭௯—௧௮0 |
| பாராட்டு:— | ,, | கெ. ஜி. சேஷையர் | ௧௮0 |
| கலைசைக்கோவைச் செய்யுள் முதற் குறிப்பகராதி:— | ,, | மஹாமஹோபாத்யாய திராவிட வித்யா பூஷண தாக்ஷிணாத்யகலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர் | 129–132 |
| பெருந்தொகைப் பொருட்குறிப்பகராதி: | ,, | மு. இராகவையங்கார் | 7–14 |
| குருகைமான்மியம்:- | T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். | | 297–312 |

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4. | தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1935.

Srimathu R. Shanmuga Rajeswara
...tha Sethupathy Avergal and
...y Thiru. Narayana Iyengar at the
...ower Press, No. 54, New Jail Road, Madura.

13 APR 1935

# ஒரு வேண்டுகோள்.

---

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரு இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றை பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என் விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தக முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்க பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந் மாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும் இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையு மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டு அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

உ.

கடவுள் துணை.


# செந்தமிழ்.

| | | |
|---|---|---|
| தொகுதி-௩௨.] | யுவஸு சித்திரைமீ | [பகுதி-௬. |
| Vol. XXXII. | April-May 1935 | No. 6. |


## நியாயப்பிரவேச மணிமேகலை.

[[illegible]—ஆம் பக்கத் தொடர்ச்சி.]

நியாயப்பிரவேசத்தில் (4) லோகவிருத்தம் வருமாறு:—

25 லோகவிருத்தோ யதா। ஶுசி நரஶிர: கபாலம்।
ப்ராண்யங்கத்வாத்। ஶங்கஶுக்திவதிதி।

இதன்பொருள்: உலகவிருத்தமாவது மனிதர்மண்டையோடு தூய்மையுடையது, உயிருடம்பினுறுப்பாதலால், சங்குச்சிப்பிபோலும் என்று கூறுவது என்பதாம்.

இதற்கும் இலக்கணம் கூறப்படவில்லை. இதனுள் 'உலகவிருத்தம்' என்பது பெயர். 'மனிதர்மண்டையோடு தூய்மையுடையது' என்பது உதாரணம். 'உயிருடம்பின் உறுப்பாதலால்' என்பது ஏது. 'சங்குச் சிப்பிபோலும்' என்பது திருஷ்டாந்தம். இவை தவறுபட்டன என்பது பின்வருவனவற்றால் விளங்கும்.

இங்குக்காட்டிய உதாரணம் மணிமேகலையுதாரணத்தின்வேறு யிருப்பதுடன், ஏதுவும் எடுத்துக்காட்டும் மிகுத்துக்கூறப்பட்டுள்ளன. உலகவிருத்தம் என்பதற்கு உயர்ந்தோர்வழக்கோடு மாறுபடுவது என்ற பொருள்கொண்டு, 'மனிதர்மண்டையோடு தூய்மையுடையது' என்று உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது. அங்ஙனமாயின் அது வைதிக ருக்கு ஆகமவிருத்தமாவதன்றி உலகவிருத்தமாகமாட்டாது. அன்றியும்,

உலகமென்பதற்கு உலகிலுள்ளாரென்று பொருள்கொண்டாலும் காபாலிக பைரவாதி மதத்தினர்க்கு அது விருத்தமாகாமையாலும் உலகவிருத்த மாகமாட்டாது. இதில் ஏதோ இடர்ப்பாடு இருப்பதாகத்தோன்றினமையால் இதற்குமட்டும் ஏதுவும் திருஷ்டாந்தமும் காட்டப்பட்டுள்ளன. 'உயிருடம்பினுறுப்பாதலால்' என்ற அவ்வேதுவும் 'மனிதர் மண்டையோடு தூயது' என்பதைச் சாதிக்கத்தக்கதாயில்லை; ஏனெனில் உயிருடம்பினுறுப்புக்களெல்லாம் தூய்மையுடையனவாயில்லை. அவையெல்லாம் தூய்மையுடையனவாகவும், மனிதர்மண்டையோடுமாத்திரம் தூய்மையில்லதாகவும் உலகத்தார்கொண்டிருப்பாராயின் அப்பொழுது மனிதர்மண்டையோடு தூய்மையுடையது என்று வாதி சொல்லுவது உலகவிருத்தமெனத்தகும்; காட்டிய ஏதுவும் தூய்மையைச் சாதிக்க வல்லதாகும். அங்ஙனமின்றி, முத்து பட்டு முதலிய ஒருசில உயிருடம்புறுப்புக்கள் தூய்மையுடையனவாயும், நிணநீர்முதலியன தூய்மையில்லனவாயுமிருத்தலால் அது பொதுவநைகாந்திகம் என்னும் ஏதுப்போலியாகிறது.

மணிமேகலையில் இது வருமாறு:—

'உலக விருத்தம், உலகின்மாறுமுரை
இலகுமதி சந்திர னல்ல வென்றல்' (கசுஉ—கசுங)

இதன்பொருள்: வெளிப்படை. இதனுள், 'உலகின்மாறுமுரை' என்று இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. இது நியாயப்பிரவேசத்திற் கூறப்படவில்லை.

இதன்கண் உலகவிருத்தம் என்பதற்கு, ஸாதாரணமான உலக வழக்கிற்கு மாறு எனப் பொருள்கொண்டு, 'மதி சந்திரனல்ல என்றல் என்று உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது. 'மதி சந்திரனல்ல' என்றது மதியைச் சூரியன் என்று கூறுதல் என்றவாறு. 'அல்ல' என்பது பான் மயக்கு. உலகத்திலுள்ளோர் எல்லோருமே மதியைச் சந்திரனென வழங்குதலால் அதற்கு மாறாக, மதி சந்திரனல்ல, சூரியன் என்று வழங்குதல் உலகவிருத்தமாம் என்பது பொருந்துகின்றது.

இங்ஙனங் கூறியவாற்றால் நியாயப்பிரவேசத்திலுள்ள லோக விருத்தநிரூபணம் மணிமேகலையிலுள்ள உலகவிருத்தநிரூபணத்தோடு முழுதும் வேறுபட்டதேன்பதும் பிழைபட்டதென்பதுந் தெளியத்தகும்.



நியாயப்பிரவேசத்தில் (5) ஸ்வவசனவிருத்தம் வருமாறு:—

26 ஸ்வவசநவிருத்தோ யதா । மாதா மே வந்த்யேதி ।

இதன்பொருள்: ஸ்வவசனவிருத்தமாவது 'என்தாய் மலடியென்று கூறுவது' என்பதாம்.

இங்கும் பெயரும் உதாரணமுமே கூறப்பட்டுள்ளன. இதனுள், ஸ்வவசனவிருத்தம் என்பது பெயர். 'என்தாய் மலடி' என்பது உதாரணம்.

இங்கு, தாய் என்ற தன் சொல்லுடன் மலடி என்ற சொல் மாறுபடுதலால் இது சுவவசனவிருத்தமாயிற்று.

மணிமேகலையில் இது வருமாறு:—

'சுவசன விருத்தந்தன் சொன்மா றியம்பல்;
என்தாய் மலடி யென்றே யியம்பல்.' (கசுo—கசுக)

இதன்பொருள்: சுவசனவிருத்தமாவது தான் முன்புகூறிய கூற்றிற்கு மாறாகக் கூறுவது. (அதற்கு உதாரணம்) 'என்தாய் மலடி' யென்றுகூறுவது என்பதாம்.

இதனுள், சுவசனவிருத்தம் என்பது பெயர். தன்சொன்மாறியம்பல் என்றது இலக்கணம். இது நியாயப்பிரவேசத்திற் கூறப்படவில்லை.

சொல்—சொற்கு; குவ்வுருபு விகாரத்தாற் றொக்கது. மாறு—மாறாக. 'என்றே யியம்பல்' என்புழி ஏகாரம் அசைநிலையாய்நின்றது. மணிமேகலையில் எண்ணுமுறைக்கண் மூன்றாவதாய்நின்ற இது நியாயப்பிரவேசத்தில் ஐந்தாவதாகவைத் தெண்ணப்பட்டது.

நியாயப்பிரவேசத்தில் (6) அப்பிரசித்தவிசேடணம் வருமாறு:—

27 அப்ரஸித்தவிஶேஷணோ யதா । பௌத்தஸ்ய
ஸாங்க்யம் ப்ரதி விநாஶீ ஶப்த இதி ।

இதன்பொருள்: அப்பிரசித்தவிசேடணமாவது (சாங்கியனை நோக்கிப் பௌத்தன்) 'சத்தம் அநித்தியம்' என்று கூறுவது என்பதாம்.

இங்கும் பெயரும் உதாரணமுமே கூறப்பட்டுள்ளன. அப்பிரசித்த விசேஷணம்என்பது பெயர். '(சாங்கியனைநோக்கிப் பௌத்தன்)"சத்தம் அநித்தியம்" என்பது' உதாரணம். இங்கு விசேடணம்—அநித்தமாதல்.

சாங்கியனுக்கு ஒருபொருளும் அநித்தமாகக் காணப்படாமையால் இங்கு 'அநித்தம்' என்னும் பக்கவிசேடணம் பிரசித்தமில்லாமைபற்றி இப்பௌத்தன்பேச்சு சாங்கியனுக்கு அப்பிரசித்தவிசேடணம் என்னும் பக்கப்போலியாயிற்று.

மணிமேகலையில் இது வருமாறு:—

'அப்பிர சித்த விசேடண மாவது:
தத்தம் எதிரிக்குச் சாத்தியம் தெரியாமை;
பௌத்தன் மாறாய் நின்றசாங் கியனைக்
குறித்துச் சத்தம் விநாசி யென்றால்
அவன் அவி நாச வாதி யாதலிற்
சாத்திய விநாசம் அப் பிரசித்த மாகும்.' (௧௬௭—௧௭௨)

இங்கு அப்பிரசித்தவிசேடணம் என்பது பெயர். 'தத்தம் எதிரிக்குச் சாத்தியம் தெரியாமை' என்பது இலக்கணம். இது நியாயப்பிரவேசத்தில் இல்லை. 'பௌத்தன் மாறாய்நின்ற சாங்கியனைக் குறித்துச் சத்தம் விநாசியென்றால், அவன் அவிநாசவாதியாதலின் சாத்தியவிநாசம் அப்பிரசித்தமாகும்' என்பது உதாரணத்தொப்பவாக்கியம். இதனுள், '(பௌத்தன் மாறாய்நின்ற சாங்கியனைக்குறித்து) "சத்தம் விநாசி" யென்பது' உதாரணவாக்கியம். மேலுள்ளவை விளக்கங்கருதியெழுந்தன. இவ்விளக்கமும் நியாயப்பிரவேசத்தில் இல்லை.

விசேடணம் பக்கவசனத்துள்ள துணிபொருளாதலால் அது சாத்தியம் எனப்பட்டது. சாத்தியந்தெரியாமை என்றது துணிபொருள் தெரியாதிருக்கச்சொல்லுதல் என்றவாறு. சாத்தியம் - துணிபொருள். சொல்லுதல் என்பது சொல்லெச்சம். விநாசி—அழிவுள்ளது. என்றால் என்பது எனல் என்பதை அநுவதித்துக் கூறியபடி.



நியாயப்பிரவேசத்தில் (7) அப்பிரசித்தவிசேஷ்யம் வருமாறு:—

28 அப்ரஸித்தவிஶேஷ்யோ யதா । ஸாங்க்யஸ்ய பௌத்தம் ப்ரதி சேதந ஆத்மேதி ।

இதன்பொருள்: அப்பிரசித்தவிசேஷ்யமாவது: '(பௌத்தனைநோக்கிச் சாங்கியன்) "ஆன்மா அறிவுடைப்பொருள்" என்று கூறுவது' என்பதாம்.

இங்கும் பெயரும் உதாரணமுமே கூறப்பட்டுள்ளன. இதனுள் அப்பிரஸித்தவிசேஷ்யம் என்பது பெயர். (பௌத்தனைநோக்கிச் சாங்கியன்) "ஆன்மா அறிவுடைப்பொருள்" என்பது உதாரணம். இதில் ஆன்மா விசேடியம்; அது பௌத்தனுக்கு அப்பிரசித்தமாகையால் அவனை நோக்கிக்கூறுங்கால் அவனுக்கு இது அப்பிரசித்தவிசேடியமாயிற்று.

மணிமேகலையில் இது வருமாறு:—

'அப்பிர சித்த விசேடிய மாவது:
எதிரிக்குத் தன்மி பிரசித்த மின்றி
யிருத்தல்; சாங்கியன் மாறாய் நின்ற
பௌத்தனைக் குறித்தான் மாச்சை தனியவான்
என்றால் அவன் அநான்ம வாதி
யாதலிற் றன்மி அப்பிர சித்தம்' (௧௭௩—௧௭௮)

விசேடியமெனினும் தன்மியெனினும் ஒக்கும். பிரசித்தமின்றி யிருத்தல் - அறியப்படாததாயிருத்தல். மாறு - எதிரி. சைதனியம் - அறிவு. அவன் என்றது பௌத்தனை. அநான்மவாதி - ஆன்மதத்துவமொழிந்த பிறதத்துவங்களைமட்டும் உடன்பட்டுப் பேசுமவன் (-பௌத்தன்). தன்மி - விசேடியம்; அது இங்கே பக்கப்பொருளாகிய ஆன்மா. பௌத்தனைக்குறித்து ஆன்மா சைதந்யவான் என்று வகையுளிபிரித்துக் கூட்டுக.

இங்கும் 'அப்பிரசித்தவிசேடியம்' என்பது பெயர். 'எதிரிக்குத் தன்மி பிரசித்தமின்றி யிருத்தல்' என்பது இலக்கணம். [இது நியாயப்பிரவேசத்தில் இல்லை.] பிரசித்தமின்றியிருத்தல் என்றாயினும், பிரசித்தமின்றியிருக்கக் கூறுதல் என்பது கருத்தாகக்கொள்க. 'சாங்கியன் மாறாய்நின்ற பௌத்தனைக் குறித்து "ஆன்மாச் சைதனியவான்"

என்றால், அவன் அநான்மவாதியாதலில் தன்மி அப்பிரசித்தம்' என்பது உதாரணகொர்ப்பவாக்கியம். இதனுள், சாங்கியன்..............."ஆன்மாச் சைதனியவான்" என்பது உதாரணவாக்கியம். 'அவன் அநான்மவாதி யாதலிற் றன்மி அப்பிரசித்தம்' என்றது விளக்கிக்காட்டியவாறு. இவ்விளக்கவாக்கியமும் நியாயப்பிரவேசத்தில் இல்லை.

நியாயப்பிரவேசத்தில் (8) அப்பிரசித்தோபயம் வருமாறு:—

29 அப்ரஸித்தோபயோ யதா। வைஶேஷிகஸ்ய பௌத்தம்
ப்ரதி ஸுகாதிஸமவாயிகாரண மாத்மேதி।

இதன்பொருள்:—அப்பிரசித்தோபயமாவது (பௌத்தனைநோக்கி வைசேடிகன்) 'ஆன்மா சுகம் முதலியவற்றுக்குச் சமவாயிகாரணம்' என்று கூறுவது என்பதாம்.

இங்கு உபயம் என்ற தொகைக்குறிப்பு விசேடண விசேடியங்களை யுணர்த்திநின்றது. இதற்கும் பெயரும் உதாரணமுமே காட்டப்பட்டுள்ளன. அப்பிரசித்தோபயம் என்பது பெயர். '(பௌத்தனைநோக்கி வைசேடிகன்) "ஆன்மா சுகம் முதலியவற்றுக்குச் சமவாயிகாரணம்" என்பது' உதாரணம். இதனுள் ஆன்மா விசேடியம். சுகமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம் என்றது விசேடணம். இவ்விரண்டும் பௌத்தனுக்கு அப்பிரசித்தமாகையால் அவனைநோக்கிக்கூறுங்கால் இக்கூற்று அப்பிரசித்தோபயமாம் என்க.

மணிமேகலையில் இது வருமாறு:—

'அப்பிர சித்த வுபய மாவது:
மாறு னேற்குத் தன்மி சாத்தியம்
ஏறு தப்பிர சித்தமா யிருத்தல்;
பகர்வை சேடிகன் பௌத்தனைக் குறித்துச்
சுகமுத லியதொகைப் பொருட்குக் காரணம்
ஆன்மா வென்றாற் சுகமும் ஆன் மாவும்
தாம்இசை யாமையில் அப்பிரசித் தோபயம்.' (கஎகூ—கஅரு)

இதனுள் 'அப்பிரசித்தோபயம்' என்பது பெயர். 'மாறுனேற்குத் தன்மி சாத்தியம் ஏறுது அப்பிரசித்தமாயிருத்தல்' என்பது இலக்கணம். [இது நியாயப்பிரவேசத்திற் கூறப்படவில்லை] அப்பிரசித்தமாயிருத்தல் என்றாயினும் அப்பிரசித்தமாயிருக்கக்கூறுதல் என்பது கருத்தாகக்கொள்க. 'வைசேடிகன்.....................அப்பிரசித்தோபயம்' என்பது உதாரணகொர்ப்பவாக்கியம். இதனுள், வைசேடிகன்......."சுகமுதலிய தொகைப்பொருட்குக் காரணம் ஆன்மா" என்பது உதாரணவாக்கியம். 'ஆன்மாவென்றால்...........அப்பிரசித்தோபயம்' என்றது விளக்கிக்காட்டியவாறு. இவ்வாறு நியாயப்பிரவேசம் விளக்கியுரைக்கவில்லை.



மாறுனேன்—எதிரி. தன்மி—பக்கப்பொருள். சாத்தியம்—துணிபொருள். ஏறுது - மனங்கொள்ளாது. அப்பிரசித்தம் - அறியப்பட்டிராதது. பகர் வைசேடிகன் என்றது பக்கவசனம் கூறும் வாதியாகிய வைசேடிகன் என்றபடி. சுகம் முதலிய தொகைப்பொருள்களாவன: சுகம், துக்கம், இச்சை, வெறுப்பு, முயற்சி, அறம், மறம் என்பன. இவை வைசேடிகரால் ஆன்மாவின்கண் நிகழும் காரியமாகிய குணங்களென்று கொள்ளப்பட்டன. ஆன்மாவென்று ஒருபொருள் உண்டென்றுகொள்ளப்படாதென்னும் புத்தமதத்தினனுக்கு ஆன்மாவும் அதனைப்பற்றிய சுகமுதலியனவும் அப்பிரசித்தமாகையால் இது அவன்கருத்தால் அப்பிரசித்தோபயம் என்னும் பக்கப்போலியாயிற்று. சுகமும் ஆன்மாவும் தாம் இசையாமையால் என்றது சுகமும் ஆன்மாவும் உண்டென்று தாம் இசைதற்கு இலக்காகாமையால் என்றவாறு. இங்கு, தாம் என்றது அப்புத்தமதக்கோட்பாடுடைய குழுவினரை அகப்படுத்திக்கூறியவாறு. இதனால் அவன் தானும் இசையாமை தானே பெறப்பட்டது.

இனி, ஒன்பதாம் பக்கப்போலிவிவரணத்தில் நியாயப்பிரவேசத்துக்கும் மணிமேகலைக்கும் பெரிதும் மாறுபாடு காணப்படுகிறது. நியாயப்பிரவேசத்தில் அதன்பெயர் பிரசித்தசம்பந்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மணிமேகலையில் அதற்கு மாறாக அப்பிரசித்தசம்பந்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

புரொபஸர் மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள் ஆங்கிலத்தில் எழுதிய மணிமேகலையாராய்ச்சியில் மணிமேகலையில்உள்ளபடியே நியாயப்பிரவேசத்திலும் அப்பிரசித்தசம்பந்தம் என்றே இருப்பதாகக் காட்டியிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

அப்படியிருந்து பொருட்பொருத்தமும் இருக்குமானால் மாறுபாடில்லையென்று சொல்லலாம்.

ஆனாலும், பிரசித்தசம்பந்தம் என்றபெயரே பொருட்பொருத்தமுள்ளதாகக் காணப்படுகிறது. அதன் மறுதலையாகிய அப்பிரசித்த சம்பந்தம் என்னும் பெயர் அப்பக்கப்போலிக்குப் பொருட்பொருத்தமில்லாததாகவும் இருக்கிறது.

மணிமேகலையில் பிரசித்தசம்பந்தம் என்ற பெயரையமைத்துத் திருத்திக்கொள்ளவும் இடங்கொடாதிருக்கும்படி செய்யுள் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் மணிமேகலையாசிரியர் பிரசித்தசம்பந்தம் என்ற பெயர்கொண்டு செய்யுள்செய்யவில்லையென்பது தெளிவாய் அறியத்தகும்.

ஆதலால், மணிமேகலையின் சுத்தபாடம் வேறாயிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. இங்ஙனம் வேறுபடுதற்கேற்ற கொள்கை வேறுபாடுகளும் காணப்படுகின்றன. அவையெல்லாம் பின்வருவனவற்றால் அறியத்தகும்.

(தொடரும்.)

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---

# ஒரு திருத்தம்.

---

செந்தமிழ் ௩௧—ஆம் தொகுதியின் ௧௧—ஆம் பகுதியில் ௨௬௩—௨௬௪—ஆம் பக்கங்களில் உள்ள தருக்கசங்கிரகசோதனத்தில் 9—ஆவது சோதனத்தின் விளக்கப்பத்திகள் மூன்றும் 10—ஆவது சோதனத்தின் பத்தி ஒன்றும் ஆகப் பத்திகள் நான்கும் பிழைபட்டிருத்தலால் அவற்றைச் செந்தமிழினின்றும் விலக்கிவிடவேண்டும்.

பத்திராசிரியர்.

---



# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௧௬௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## அநுமான் தன் வரலாற்றைச் சீதைக்குத் தெரிவித்தல்.

[சீதை, மேலே கூறியவாறு கருதி, 'இவன் பேச்சு வஞ்சகமற்றது. இவன் உள்ளத்தே உள்ளதை உள்ளவாறே உரைக்கின்றான். இவன் யாவன் என விசாரித்தற்குரியன்' என்றெண்ணி 'வீரா, நீ யார்?' என வினவ, அவ் வினாவைக் கூப்பிய கையோடு தலைமேற்கொண்டு விடை கூறுவானாய்த் 'தாயே! இராமபிரான் உன்னைப் பிரிந்தபின்பு தெரிந்தெடுத்துக்கொண்ட சிநேகன், சூரிய குமாரனும் வானராசனுமான சுக்கிரீவனென்பவன். அவன் தமயன், இராவணனைத் தன் வாலிற் கட்டித் தூக்கிக்கொண்டு அநாயாசமாக அட்டதிக்குக்களினும் பாய்ந்த அசகாயசூரன். அவன் தேவர்கள்வேண்டிக்கொள்ள, மந்தரமலை மத்தாக வாசுகிப்பாம்பு கடைகயிறாகத் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதமெடுத்துத் தேவர்களுக்குக் கொடுத்த அபாரமான தோள்வலிபடைத்தவன். அப்படிப்பட்ட வாலியை உன் நாயகன், ஒரே அம்பினால் உயிர்வாங்கி, அவன் இராச்சியத்தை அவன் தம்பி சுக்கிரீவனுக்கு அளித்து, அவனைத் துணையாகச் சேர்த்துக்கொண்டான். அந்தச் சுக்கிரீவமகாராசனுடைய மந்திரிகளுள் அடியேன் ஒருவேன். அநுமனென்னும் பெயரினேன். எங்கள் அரசன் சேனை எழுபதுவெள்ளமென்னும் பெருந்தொகை கொண்டது. அந்தச் சேனை வீரர் ஒவ்வொருவரும் கடல்கடக்கவல்லவர். அவர்களெல்லாரும் எந்தக்காரியத்தையும் உன் நாயகன்குறிப்புப்படி செய்துமுடிக்க மனமொருப்பட்டவராய் அவன்கட்டளைப்படி உன்னைத் தேடுதற்கு எல்லாத்திசைகளிலும் சென்றிருக்கின்றனர். அவர்கள் உன்னை இவ் அண்டத்துள்ளே காணாவிட்டால், வெளியே உள்ள அண்டங்களினுள்ளுஞ் சென்று தேடப்போயிருக்கிறார்கள்.

உன்னை இராவணன் வான்வழியாகக் கொண்டுபோனபோது, நீ ஆடையிற்பொதிந்து பூமியில் எறிந்த நகைமுடிப்பு எங்கள் மலைமேல் நாங்களிருந்த இடத்தில் விழுந்திருந்ததை இராமபிரானுக்குக் காட்டி, இராவணன் தென்முகமாகச்சென்றானென்றதை அப்பெருமான் மனத் துட்கொண்டு அடியேனைத் தனியாக ஓர் ஏகாந்தமான இடத்துக்கு அழைத்துப்போய்ச் சொல்லவேண்டியவைகளைச் சொல்லி "நீ தென்றிசை சென்று தேடிக்காண்பாயாக" என்று செப்பியருளினான். அவன் அருள் பழுதுபடாதாகையால், உன்னைத் தேடச்சென்ற எத்தனையோ கோடி யருள் ஒருவனான எளியேன் உன்திருவடி தெரிசிக்கும்பேறு பெற்றேன்.'*]

நீ கவுரவித்து அணிந்துகொண்டிருக்கும் மங்கலியத்தை
அந்த நகை காத்ததில்லை, நீ அவமதித்துக் கழற்றியெறிந்த
மற்றைநகைகளே காத்தன எனல்.

85 'கொற்றவற் காண்டுக் காட்டிக் கொடுத்தபோ தடுத்த தன்மை,
பெற்றியின் உணர்தற் பாற்றோ! உயிர்நிலை பிறிதும் உண்டோ!
இற்றைநா ளளவும் அன்னா! அன்றுநீ இழித்து நீத்த
மற்றைநல் அணிகள் காண்,உன் மங்கலம் காத்த மன்னோ'

---

*குறிப்பு:—சீதை, 'நீ யார்?' என வினவிய வினாவுக்கு விடையளிக்கும் இடையில், அநுமான், இராவணனைத் தோள்வலியாலன்றி வால்வலியாலேயே வென்ற வாலியைப் பல அம்புகளாலன்றி ஓரம்பாலேயே இராமன் கொன்றானென்ற, இடைப்பிறவரலாகக்கூறிய மெய்ம்மைக்கூற்றும், சுக்கிரீவனது சேனா வீரருள் தான் ஒருவனே கடல்கடக்க வல்லவனாயிருக்க, ஒவ்வொருவீரரும் அத் தகையரென்றும் அவர்கள் சீதையை இந்த அண்டத்திற் காணாவிடில் பிறஅண் டங்களினும் தேடச்சென்றிருக்கின்றாரென்றும் கூறிய பொய்ம்மைக்கூற்றும், முறையே மந்றேன் முவிரித்தல் போய்யுரைத்தல் என்னும் குற்றங்களாகத் தோன்றினும், உண்மையில் அவ் இருவகைக்கூற்றுக்களும், உயிர்விடுமளவுக்கு அதைரியமடைந்திருந்த சீதைக்குத் தைரியமுண்டாக்குவதாகிய 'புரைதீர்ந்த நன்மைபயக்கும்'பொருட்டுக் கூறியனவாதலால் நிர்த்தோஷமானவை யென்ன லாம்.



இ-ள். 'தாயே, உன் நாயகனுக்கு அவ்விடத்தில் - நாங்களிருந்த மலையிலே - (அந்த நகைகளைக் கொண்டுவந்து) காட்டிக் (கையிலே) கொடுத்தபோது, (உன் நாயகன்பால்) நிகழ்ந்த (மெய்ப்பாட்டுத்) தன்மை (நான்சொல்லும்) விதத்தினால் (நீ) தெரியும் இயல்பினதன்று. (அது கண்டோர் அறியக்கூடியதாயிருந்ததன்றிக் கேட்டோர் அறியக்கூடியதா யிருக்கவில்லை). (உன் பிரிவாற்றாமையால் இறக்குந்தருவாயிலிருந்த உன் நாயகனுக்கு அந்த நகைகள் உயிர்போய்விடாமல் நிலைக்கச்செய்தன. அவைகளைக் கண்டிரானேல், இறந்திருப்பான். ஆதலால், அந்த நகை களே அவன் உயிர்நிலையாயிருக்கின்றன. அவனுக்கு அந்த நகைக ளன்றி) வேறு உயிர்நிலை இல்லை, (அவைகளைப் பார்த்தும் பரிசித்தும் இன்றளவும் இறவாதிருக்கிறான்.), (உன்னை இராவணன் கொண்டுபோன நாள் எந்த நாளோ,) அந்த நாளிலே, நீ (நாயகனைப் பிரிந்திருக்கின்ற அவ நமக்கு மங்கலியமல்லாத மற்றநகைகள் தகாதனவென வெறுத்து) அவ மதித்து (உன் திருமேனியினின்று) நீக்கியெறிந்த மற்ற நகைகளே இன்றைத்தினம்வரையும் உன் மங்கலியத்தை (எனவே உன் நாயகன் உயி உயிரை)க் காப்பாற்றின.' (நீ சுமங்கலியாயிருப்பது - உன் நாயகன் உயி ரோடிருப்பது - நீ கட்டியிருக்கும் மங்கலியத்தாலன்று, கழற்றியெறிந்த மற்ற நகைகளால் என்பதை அறிவாயாக என்றபடி.)

கொற்றம் - வெற்றி. கொற்றவன் - வெற்றியுடையவன் - இராமன். ஆண்டு - அவ்விடத்தில் - சுக்கிரீவன் அநுமான் முதலியோர் இருந்த ரிசியமூகமலையில். பெற்றி-விதம், தன்மை. இழித்தல்-தாழ்த்தல், அவ மதித்தல். நீத்தல் - துறத்தல் - நீக்குதல். இற்றைநாள் - இன்றைத் தினம். அன்னா - அன்னையே - தாயே. 'ஐஇறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும் உருபாம்' என்றபடி அன்னை விளியேற்கும்போது அன்னா என்றாயது. அய்மையை அம்மா! என அழைக்கும் உலகவழக்கு இங்கே கருதத்தக்கது. காண், முன்னிலையில்வரும் ஓர் உரையசை. மங்கலம் என்பது இரட்டுறமொழிதலாய், மங்கலியத்தையும் மங்கலியம் எதன் அறிகுறியோ, அதுவாகிய சுமங்கிலித்துவத்தையும் (அதாவது ஒருத்தி கட்டுக்கழுத்தியாய்—கணவன் உயிரோடிருக்கப்பெற்றவளாய்—

இருக்குந்தன்மையையும்) உணர்த்தி நின்றது. காத்தல் - (நீங்குறாமல்) தடுத்தல். மங்கலம் காத்த - மங்கலியத்துக்குக் (கழுத்தினின்று களையப்படும்) கேடுறாமல் தடுத்த. மன் ஓ அசைநிலைகள்.

நான்காம்வேற்றுமைத்தொகையாகிய 'கொற்றவற்கொண்டு' என்ற பாடத்துக்குக் கொற்றவனுக்கு (அந்த நகைகளைக்) கொண்டு(வந்து) எனப் பொருள்கொள்க.

ஏனைய ஆபரணங்களுக்கில்லாத திரு என்ற அடையுடன் திருமங்கலியம் என வழங்கப்பெற்ற மங்கலத்துக்கு அடைகொடாது வெறுமனே 'மங்கலம் காத்த' எனக் கூறி, மற்ற அணிகளை 'மற்றை நல் அணிகள்' என விசேடித்துக்கூறியது, இராமன் உயிரை முன்னையது காவாமலிருக்கப் பின்னையவை காத்தனவென்பது குறிக்க என்னலாம்.

'உன் நாயகன் சாவாமற் காத்தன' என்னாது, 'உன்மங்கலங் காத்த' என்றது மங்கலவழக்கு.

'இராமன் இறந்துபடுவனென்பதை வாயினாற் சொல்லக் கூசி "உன் மங்கலங் காத்த" என வேறுவகையாற் கூறினது—பிறிதினவிற்சியணி'

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

உ

# சாத்தனார்கோயில்கள்.

[கல்வெட்டால் அறிந்த உயரியசெய்தி.]

வை. சுந்தரேசவாண்டையார்,
ஆசிரியர், திருவையாறு.

தமிழ்மக்கள் தொன்றுதொட்டு வழிபட்டுவரும் தெய்வங்களுள் சாத்தனாரும் ஒருவர். மகாசாத்திரன் என்ற பெயரே மாசாத்தன் என்று திரிந்தது என்பதும், இவர் பாசண்டமாகிய தொண்ணூற்றறுவகைச் சமயசாத்திரத் தருக்கக்கோவைகளிற் பயின்றவராதலால் பாசண்டச்சாத்தர் எனப்படுவரென்பதும் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்குநல்லாரது கருத்தென்று புலப்படுகிறது.

சாத்தனாருக்குக் கோயில் அமைத்து வழிபடும்வழக்கம் சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது. இக்காலத்தில் ஐயன்கோயில், ஐயனார் கோயில் என்ற பெயருடன் பலகோயில்கள் தமிழ்நாட்டிற் பல இடங்களிலும் காணப்படுகின்றன. அவற்றுள், காப்பியக்குடி, பிடவூர் என்றவை சிறந்தவை. அப்பதிகள் யாண்டுள்ளன என ஆராய்வாம்.

சாத்தனாரைப்பற்றிய இனிய வரலாறு ஒன்று ஐம்பெருந் தமிழ்க் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்திற் காணப்படுகிறது. அது வருமாறு:—

முன்னொருநாளில் மாலதி என்பாளோர் பார்ப்பனி தனது மாற்றாள்குழந்தைக்குத் தன்பாலைச் சங்காலூட்ட அப் பால் விக்கிக் குழந்தை அவள்கையிலே இறந்தது. அதனால் மாலதி என் மாற்றாளும் கணவனும் என்மீது அடாப்பழி கூறுவரே! இதற்கு என்செய்வேன்! என அஞ்சி அம்மகவை எடுத்துக்கொண்டு காவிரிப்பூம்பட்டினத்தேயிருந்த கற்பகக் கோட்டம், ஐராவதக்கோட்டம், பலதேவன்கோட்டம், சூரியன்கோட்டம்,

கைலாயக்கோட்டம், வச்சிரக்கோட்டம், நிக்கந்தக்கோட்டம் முதலிய கோட்டங்களுக்குச் சென்று தன் துயரைத் தீர்க்குமாறு குறையிரந்தும் தீராமையினால் பாசண்டச்சாத்தனார்கோயிலிலே பாடுகிடந்தாள். அவ்வேளையில் சுடுகாட்டுக்கோட்டத்திருந்த இடும்பிணம் தின்னும் இடாகினிப்பேய் இளங்கொடிபோன்ற ஒரு பெண்வடிவாய் அணுகிப் பாடுகிடந்தாளைநோக்கி "ஒருகுற்றமுமற்றவளே! முற்பிறப்பில் தவஞ் செய்தில்லாதவருக்குத் தேவர்கள் வரங்கொடார், நீ பாடுகிடந்து பயனென்? எங்கே, நின் குழந்தையைப் பார்ப்போம்" என்று வாங்கித் தன் வயிற்றினிலிட்டு மறைந்தது. இறந்த சேயின் உடலையும் இழந்த மாலதியின்வருத்தம் காணப்பொறாத பாசண்டச்சாத்தனார் அவளைநோக்கி "அன்னாய்! நீ செல்கின்ற வழிமுன்னர்ப் பொதும்பரிடத்து அக்குழவி உயிரோடிருக்கின்றது. கண்டிலையோ?" என, அவள் அங்குச் சென்று பார்க்க, அவர் குழந்தையாய்க்கிடந்தார்.

அவள் அக்குழவியை ஐயமின்றி எடுத்துச்சென்று தாய்கைக் கொடுத்தாள். அக்குழவியாகிய சாத்தனாரும் கல்வி கேள்விகளில் துறை போய்த் தந்தைதாய சிறந்தபின்னர் நீர்க்கடன்முதலிய செய்து தாயத்தாரொடு வெல்வழக்குரைத்துத் தேவந்தி என்னும் மனைவியோடு எட்டியாண்டு கூடிவாழ்ந்தனர். பின் தம் மூவா இளநலத்தைத் தம் மனைவிக்குக் காட்டி உண்மையையுரைத்து அவள்குறிப்பினையறிந்து அதற்கு ஏற்ப அவளுக்கு 'நீ எம் கோட்டத்துக்கு வா' என அருளிச்செய்து, பிறர்க்கெல்லாம் 'தீர்த்தத்துறைபடிவேன்' என்று நீங்கினார் என்பது.

இங்ஙனம் மாயக் குழவியாகி வளர்ந்தது காப்பியக்குடி என்னும் பதியாகும் என்பது "காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து" என்று சிலப்பதிகாரத்து வரந்தருகாதை 83 ஆம் வரியால் போதருகிறது. இந்தக் காப்பியக்குடி என்பது தஞ்சைஜில்லாவில் சீகாழிக்குத் தென்கிழக்கில் மிக அண்மையில் உள்ளது. அங்குச் சாத்தனார்கோயில் ஒன்று இன்றும் நிலவுகின்றது.



சாத்தனாரைப்பற்றிய மற்றும் ஒரு வரலாறு திருத்தொண்டர் புராணத்து வெள்ளானைச்சருக்கத்தால் அறியலாகும். அஃதாவது:—

சேரமான்பெருமாணாயனார் அருளிச்செய்து திருக்கயிலாயத்தில் சிவபெருமான் திருமுன்பு விண்ணப்பித்த ஆதியுலாவை மாசாத்தனார் கேட்டறிந்துவந்தருளித் திருப்பிடவூரில் வெளிப்படுத்தினாரென்பது. இதனை,

"சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தஅத் திருஉலாப் புறம்அன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா சாத்தனார் தரித்திந்தப்
பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில் வெளிப்படப் பகர்ந்தெங்கும்
நார வேலைசூழ் உலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே"

என்று பெரியபுராணம் வெள்ளானைச்சருக்கத்து 52-ஆவது திருப்பாட்டுச் செப்பும்.

அத்திருப்பாட்டில் குறிப்பிடப்பட்ட பிடவூர் யாண்டுள்ளதெனில், திருச்சிராப்பள்ளியிலிருந்து திருமுதுகுன்றத்திற்கு (விருத்தாசலத்துக்கு)ப் போகும் ரயில் பாதையில் உள்ள, பிட்சாண்டார்கோயில் ரயில்வேநிலையத்தில் இறங்கிப் பிரம்பலூருக்குப் போகும் பெருவழியில் சிறுகனூருக்குப்பக்கத்தில் இருக்கின்றது.

பண்டைப்பெருமக்கள்பலர் தம்வரலாற்றுக்கருவூலமாயமைந்துள்ள புறநானூற்றின் 395-ஆம் பாட்டில்,

"செல்லா நல்லிசை யுறந்தைக் குணாது
நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூ
ரறப்பெயர்ச் சாத்தன் கிளையேம்"

என்பதில் பாட்டுடைத்தலைவன்பெயர் சாத்தனென்று குறிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ்க்குறிப்பிலும் "சோழநாட்டுப் பிடவூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன்" என்று அவன்பெயர் கூறப்பட்டிருக்கிறது.

அப்பாட்டுடைத்தலைவனுக்கு, அவ்வூரில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள மாசாத்தனார்பெயரே இடப்பட்டிருக்கலாமென்று தமிழ்த்தெய்வமன்ன மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் அப்பாடலின்கீழ்க் குறிப்பெழுதியுள்ளார்கள்

தம் ஊரில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள தெய்வத்தின் பெயரைத் தம் மக்களுக்கு இடும் வழக்கம் பண்டும் இன்றும் தமிழ்மக்களிடத்திற் காணப்படுவதொன்றேயாகும்.

இவ்வூர், இப்போது திருப்பட்டூர் என வழங்கப்படுகிறது. ஈண்டுள்ள ஐயனார்கோயிலிற் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. (ஐயனார்கோயில்களில் இஃதொன்றே கல்வெட்டுக்கள் அமையப்பெற்றதெனத் தோன்றுகிறது.) கல்வெட்டுக்களில் இவ்வூர் 'பிடவூர்நாட்டுப் பிடவூர்.' என்று காணப்படுகிறது.

மேற்கூறிய புறநானூற்றுச் செய்யுளில் "உறந்தைக்குணாது...... பிடவூர்" என்று குறிப்பிட்டிருப்பதாலும், உறையூருக்குக் கிழக்கே வேறு பிடவூர் காணப்படாமையாலும், ஈண்டுக்கூறிய பிடவூரிலே ஐயனார்கோயில் சிறப்பாக இன்றும் விளங்குவதாலும், இதுவே மேற்கூறிய புறநானூற்றுச்செய்யுளிற் கூறப்பட்டதும், பெரியபுராணத்திற் கூறியாங்கு மாசாத்தனார் திருவுலாப்புறத்தை வெளிப்படப்பகர்ந்ததும் ஆகிய பிடவூராகும் என்பது தேற்றமாம்.

இவ்வூர் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக் குரியராகிய வேளாண்பெருமக்கள் வாழிடமாயும், தேவார வைப்புத்தலங்களில் ஒன்றாகியும், 'பேரருளாளன் பிடவூரன்' என்று தேவாரத்திலும், பாராட்டப்பெற்ற தலைவனொருவன் வாழ்ந்ததாகியும் விளங்கும் சிறப்பமைந்ததாகும்.

---



21

# காலம்.

வேலூர் S. M. D. H. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
வித்வான். K. S. விசுவநாதசாஸ்த்ரி, P. O. L. அவர்கள் எழுதுவது.

[௫௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## பருவம்.

பருவமாவது; மாதம் இரண்டுசேர்ந்ததொரு காலப்பகுதியாம். இதனைப் பெரும்பொழுதென்று பழந்தமிழ்மக்கள் வழங்கினரென்றும் அப்பெரும்பொழுதும் ஒரு யாண்டின் ஆறில் ஒருபகுதியாகுமென்றும் முன்னருணர்ந்தோம். இப்பாகுபாடும் ஓர் யாண்டில் நிகழும் பல்வகை இயற்கைத்தோற்றத்தின் வேறுபாடுகளையும் அறுவகைப்படுத்தி அவற்றிற்குக் கார் முதலியனவாய பெயர்களும் குறித்து வழங்கியதால் எழுந்ததாகும். இக் கார்முதலிய பெயர்களும் அந்தந்தக் காலத்தினியல்பைத் தெரிப்பனவேயாகும். இப்பெற்றியனவாய பாகுபாடும் குறியீடுமே வடமொழியினும் காணப்பெறுகின்றன. ஐரோப்பியர்மட்டும் நான்கே பருவமெனப் பகுத்திருக்கின்றனர். அந்நாட்டினியற்கை அத்தகையதே போலும்.

நமதுநாட்டுப் பெருமக்கள் பண்டைக்காலத்திற் பருவங்குறித்தே பெரும்பொழுதைப் பெரும்பாலும் வழங்கிவந்தனர் என்றும் மிகத் தொன்மையதாய தொல்காப்பியமும் மற்றைய அகப்பொருளிலக்கணங் களும் அவ்வகப்பொருள் தழுவிய இலக்கியங்களும் பெரும்பொழுதைக் குறிக்கவேண்டுமிடமெல்லாம் கார்முதலிய பருவப்பெயராலேயே குறிக் கின்றன என்றும் முன்னரே தெரிந்தோம். சித்திரைமுதலிய மாதப்பெய ரால் இக்காலத்தைக் குறிப்பிடுவதும் சிறுபான்மை யுண்டு.

"நலமிகு கார்த்திகை நாட்டவ ரிட்ட
தலைநாள் விளக்கிற் றகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி" (கார் நா-26)

"தவத்தைந்நீராடுதல்" (பரிபாடல்–11–91)

"பாசி பாம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
வெய்ய வுவர்க்கு மென்றனிர்" (குறுந்தொகை—196)

என் றிவ்வகையே வருவன மிகச் சிறுவரவினவே என்பதும், ஆங்கே யுணர்ந்தோம். சித்திரை விசாகம் முதலியன ரிக்வேதத்தில் நக்ஷத்திரமே குறிக்கின்றன. சைத்திரம் வைசாகம் முதலாய சொற்களே அங்குக் காணக்கிடைப்பனவல்ல. பருவப்பெயர்களாய வசந்தம் முதலியனகொண்டே காலங் குறிப்பிடப்படுகின்றது. அம்முதன்மறையும் இவ்வகையிற் பழந்தமிழர்களோடு சிறியதோரொற்றுமையும் பெற்றிருக்கின்றது. காலஞ் செல்லச்செல்ல மாதவழக்குப் பிற்காலத்துத் தமிழ் நூல்களிற் பெருவழக்கினதாகின்றது. யஜுர்வேதத்திலிருந்து இவ்வியல்பு மிருந்து காண்பதும் நோக்கத்தக்கதாகும். இவையனைத்துஞ் சிறிது சிறிதாக மாதவழக்கு வளர்ந்து பருவப்பாகுபாட்டைப் பெரும்பாலும் மறைத்துவிட்டதென்பதைத் தெளிவாக்கும்.

## யாண்டு.

இனி யாண்டென்பதென்னையெனின் இராசிமண்டலத்திலுள்ள 12 ராசிகளிலும் ஒருமுறை கதிரவன் ஒரு வட்டம் வருவானாயின், அல்லது கதிரவன் நிரக்ஷரேகையின் தெற்கேசெல்லும் தக்ஷிணாயனமும் வடக்கேசெல்லும் உத்தராயனமும் கூடிய ஒரு காலப்பகுதி கடக்குமாயின், அல்லது கார்முதலிய பருவங்களாறும் ஒருமுறை வரிசையே கடந்தனவாயின் அதனை யாண்டென்று குறித்து வழங்கினர். அதனை இக்காலத்தில் வருஷம் ஆண்டு என்ற பெயர்களால் வழங்குகின்றனர். பண்டைக்கால வழக்கில் யாண்டு அல்லது ஆண்டு என்பனவேயுள்ளன. இவ்விரண்டினுள்ளும் யாண்டென்பதே மிகத் தொன்மையதாகும். 'வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது', 'வேந்துறு தொழிலே யாண்டினதகமே' (தொல். பொருள். கற்பியல். 188–189) என்பனபோன்ற பிரயோகங்களைக் காண்க. இவ் யாண்டென்னுமொழியே பிற்காலத்தில் ஆண்டென்றும் மருவி வழங்கிவரலாயிற்று. இவ்விதமே யார்-ஆர் என்றும் யாறு-ஆறு என்றும் யானை-ஆனை என்றும் யாடு-ஆடு என்றும் மருவி வந்தன காண்க. யாண்டென்பதற்கு இடத்தின்மேல்நிகழும் ஐயம், வருஷம் என் றிரண்டுபொருள்கள் உள. இவ்விரண்டனுள்ளும் வருட



மென்னும் பொருளுணர்த்துமிடத்துக் காரணக்குறியென்றே கருதற்கிடமுண்டு. என்னையெனின் மக்களின் வாழ்க்கையரும்புங்காலமாவது அவர் இல்லறம் மேற்கொள்ளும் காலமேயன்றோ. அவ்வில்லறத்தவனே இயல்புடைய மற்றைமூவருக்கும் நல்லாற்றின்நின்ற துணையாகின்றான். அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்று உயர்த்திக்கூறும் ஏற்றமுடையது இல்வாழ்க்கையே. ஆகலின் இல்வாழ்க்கை மக்களுக் கிவ்வுலக வாழ்க்கையில் இணையற்றதோர் நல்லறச்செயலாகின்றது. அதனை இனிது நடத்துவதுதான் காதன்மனையாளும் காதலனும் கருத்தொருமித்தபின்பே கைகூடுமாதலால் அத்தகையநிலையைப் பெறுதற்கு மாந்தர் முதன்முதலாக முயற்சிப்பது யாண்டோ? எக் கார்காலத்திலோ? அக்காலந்தொடங்கியதோர் காலப்பகுதியினையும் யாண்டென்றே வழங்கினர்போலும். யாண்டென்பது இப்பொழுது பெருவழக்கினதன்றேனும், ஆண்டென்பது கொல்லமுதலிய சேரநாட்டில் இப்பொழுதும் வழங்கிவருகின்றது. இக்காலப்பகுதியினை உணர்த்தற்குரிய மொழிகள் வடமொழியிற் பலவுள. அவை வர்ஷ, சரத், சம்வத்சரம், அப்தம் முதலியனவாம். இவ்வடமொழிகள் வர்ஷ—மழை; அதனையுடையது வர்ஷம். ச்ரு—வருத்தல்; பனியினால் வருத்துவது சரத். அப்-நீர்; அதனைத்தருவது அப்தம் என் றிவ்வகையே காரணங் குறித்தனவேயாம். இப்பெயர்களுள் வருஷம் சரத் என்ற இரண்டும் ஒருபருவத்திற்கும் யாண்டுக்கும் பெயராகின்றன. வர்ஷரிது கார்ப்பருவம். வருஷம் யாண்டு. சரத்ரிது கூதிர்ப்பருவம். மற்றைய வசந்தம் முதலிய பருவப்பெயர்களுக் கித்தன்மையிலது. இவ்வியல்பினையும் தமிழர்கள் கார்முதலாகப் பருவங்களைப் பகுத்திருப்பதையும் காண ஓர் ஐயப்பாடு மனத்தே நிகழ்கின்றது.

இக்காலத்து நாம் வருஷாரம்பமாகக்கொள்ளும் சித்திரையே அக்காலத்தும் முதலாக இருந்ததாயின் இளவேனிலன்றோ முற்கூறப்படுதல்வேண்டும். அஃதின்றிக் கார்காலத்தை முதலில் ஏன் கூறுகின்றனர். வடமொழியிலும் கார்ப்பருவத்தின்பெயரே யாண்டிற்கும் பெயராக அமைதற்குக் காரணமென்னே? வசந்தத்திற்கு இல்லாத சிறப்பு வர்ஷத்துக்கு யாதுளது? ஆங்கிலேயர்களும் குளிர் (விண்டர்) காலத்தில் ஏன் யாண்டைத் தொடங்குகின்றனர். இவையனைத்தும் காண்பார்க்குப்

பருவம் பண்டைப்பாகுபாட்டினின்றும் தற்காலத் தொரு மாறுதலைப்
பெற்றிருக்கின்றதென்றே தோன்றும். இப்பொழுது நாம் சித்திரையென்
பது கதிரவன் மேடராசியில் இருக்கும் காலமேயாதலால் அம் மேடத்
தில் அவன் முதன்முதற் செல்லுங்காலத்தையே சித்திரைவிஷு என்
கின்றோம். அதனையே யாண்டின்முதலாகவும் கொள்கின்றோம். இவ்வாறு
கணிப்பது சௌரமானக்கணக்காகும். வேறுசிலர் பங்குனியுவாநாளின்
அடுத்த நாளையே சித்திரையின் ஆரம்பமென்கின்றனர். அதனையே யுகாதி
யென்றும், வருஷாதியென்றும் கொண்டாடுவர். இவர் கணக்கிடுவது
சாந்திரமானமுறையாகும். இவர் கொள்ளும் முறையிற் சந்திரனும் அந்
தந்த நக்ஷத்திரமும் கூடுகின்ற ஒரு சிறப்பைபற்றி மாதப்பெயரமைத்த
தொருண்மை யுளதேனும் வருஷக்கணக்கில் முற்கூறியதோ ரிடர்ப்பாடு
தோன்றவே சௌரமானத்தையும் தழுவிக்கொண்டிருத்தல்வேண்டும்.
நம்முன்னோர் கதிரவனது கதிநோக்கி யாண்டுக்கணக்கிடவே அவன் இராசி
மண்டலத்தை வட்டமிடும் காலமாகிய சற்றேறக்குறைய முந்நூற்றறு
பத்தைந்து நாட்களை ஓராண்டென்று மதித்தமையின் இவ்வளவினவான
சிலவருடங்களைக் கடந்துசெல்லும்போது வருஷந்தோறும் சில நாட்க
ளாகவும் சிற்சில வருஷங்கள் சென்றபின் சிலமாதங்களாகவும் அதிகப்
பட்டுத்தோன்றின. அதிகமாதமாகும்போது அதனை அதிகமாதமென்று
கழித்துவிட்டுச் சௌரமானத்தையும் தழுவிக்கொண்டு இருவரும்
ஏறத்தாழ ஒருதிறப்பட்டனர். சாந்திரமானத்தையே முழுவகையிலும்
கைக்கொண்ட முகமதியர் முதலிய வொருசிலர் நம்மினும் வேறுபடுவது
மலையிலக்கே. மோகரம் என்பது ஒரு மாதத்தின்பெயரே. அம்மாதத்திற்
கொண்டாடப்படும் அவரது விழா நமது கணக்கின்படியே நம்முடைய
ஒரு மாதத்திலேயே வராமல் வேறுபடுவதை வருடந்தோறும் காண்கின்
றோம். ஆகவே அவர்க்கு யாண்டுக்கணக்கில் மிகுதியும் வேறுபாடுதோன்ற
வே அவர் ஆட்சிபெற்றிருந்தகாலத்தில் தருந்த நூலாராய்ச்சியுடை
யாரைக்கொண்டு சீர்திருத்தஞ்செய்துகொண்டனர். அச்சீர்திருத்தத்
தின் அடையாளமே இப்போது செய்கின்ற பசலிக்கணக்காகும்.

இச் சாந்திர சௌரமானங்களேயன்றி வியாழனது கதிநோக்கிக்
கணிக்கின்ற பார்ஹஸ்பத்யமானமென்ற மற்றொருமுறையும் வட
நாட்டிலுளது. விந்தியத்துக்கு வடக்கிலுள்ளார் வியாழனைக்கொண்டு
கணக்கிடுகின்றன ரென்பதைச் சோதிடநூலோருரையாலு முணரலாம்.



அகத்தியர் விந்தியத்தின் செருக்கையடக்கியசெய்தியும் இதனை உறுதிப்
படுத்தும். வியாழன் ராசிமண்டலத்தை யொருமுறை வட்டமிடப்
பன்னிரண்டுவருடமாகும். ஆகவே ஒவ்வோர்ராசியிலும் அவனிருக்குங்
காலத்தை ஒவ்வோர் ஆண்டாக அவர் கணித்துக்கொண்டனர்போலும்.
ஆங்கிலேயர் ஒருவருடத்துக் கித்தனைநாளெனவும் ஒவ்வொருமாதத்
திற்கும் இத்தனையே நாளெனவும் முடிவுகட்டிவிட்டனர். அவர்கள்
வருஷத்திற்கு 365¼ நாளெனக்கொண்டு ¼நாளைக் கழித்து 365 நாட்களை
12 மாதங்களுக்கும் பங்கிட்டிருக்கின்றனர். நான்குவருஷத்திற்கொரு
முறை கால்காலாகக் கூடிய ஒருநாளையும் சேர்த்து 366 நாளாகக் கணக்
கிட்டனர். அஃதே லீப்வருஷம் எனப்படும். அவ்வருடத்தில் பிப்ரவரிக்
குத் தேதி 29ஆகும். ஆகவே ஞாயிறு, திங்கள், வியாழன் இவர்களை
எதிர்பார்க்கவேண்டிய அவசியம் அவர்களுக்கில்லை.

நாம் சித்திரையை வருஷாரம்பமாகக்கொள்வதுபோலவே கொல்லம்
ஆண்டு நமது ஆவணிமுதல் ஆரம்பிக்கின்றது. வடநாட்டு வணிகர்
களோ தீபாவளியிற் புதுக்கணக்கிடுகின்றனர். முகமதியர்களின் பசலி
ஜூலை முதல்தேதியிலிருந்து ஆரம்பமாகின்றது. இப்பொழுதைய
அரசாட்சியிலுங்கூட அரசாங்கவருஷம் (official year) ஏப்பிரல் முத
லாகத்தொடங்குகின்றது. ஆங்கிலேயரோ குளிர்காலத்தில் (winter)
அதாவது நமது மார்கழியில் வருகின்ற ஜனவரியிலிருந்து வருஷா
ரம்பஞ்செய்கின்றனர். இம்மாறுதல்களையும் தமிழில் கார்ப்பருவம்
முதலாகப் பருவங்களைக்கூறுவதையு மொன்றுசேர்த்து உன்னுமிடத்
தொருமுடிவுந் தோற்றுகின்றது. இப்பொழுது வழக்கிலிருப்பது
போலவே யாண்டு சித்திரையிலிருந்த தோன்றுதகால மொன்றுண்டு.
ஒருகாலத்தில் அது கார்ப்பருவத்திலிருந்தே தோன்றியிருக்கவேண்டு
மென்பதாய இம்முடிவினைத் தொல்காப்பியத்தினாலும், அதற்கு உரை
செய்த நச்சினார்க்கினியர்முதலானோருரையாலும், பண்டைத் தமிழிலக்
கண இலக்கியங்களால் உணரப்படும் தமிழ்வழக்கினாலும், வடமொழியி
லுள்ள சில குறிப்புக்களாலும், பிறவற்றாலும் ஒருவாறு நிறுவலாம்.

பண்டைத்தமிழர்கள் நிலத்தைப் பகுத்துக்கொண்டமுறையிற்
குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற வரிசையே ஏற்புடைத்தாயி
னும்., தொல்காப்பியர் அகத்திணையியலில்,

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமணை லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (தொல். அகத். 5)

என்று முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென வரிசைப்படுத்தியிருக்கின்றனர். அவ்வகத்திணைக்குரிய பொழுதைப் பகுத்தடைவுசெய்யுமிடத்திலும்,

"காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்" (தொல். அகத். 6)

என முல்லையையே முதலாகவைத்து அதற்குரியபொழுது காரும் மாலையு மென் றிம்முறையே வகுத்திருக்கின்றனர். இவ்விடத் துரை செய்கின்ற நச்சினார்க்கினியரும் இவ்வரிசையே ஏற்புடையதென்றனர். அவர்காட்டும் அடைவு வருமாறு:—

"இனி முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற முறை என்னையெனின் இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம்பற்றிய வொழுக்கமாதலின், கற்பொடுபொருந்திக் கணவன்சொற் பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்தன் மகளிரது இயற்கை முல்லையாதலின் அது முற்கூறப்பட்டது. எனவே முல்லையென்றசொற்குப் பொருள் இருத்தலாயிற்று. 'முல்லை சான்ற முல்லையம் புறவின்' என்பவாகலின்" என்பதாம். எனவே இவரது உரையும் மாந்தர் வாழ்க்கைதொடங்குங்காலம் இக்கார்காலமே யென்றும் அக்கார்காலமே யாண்டின் தொடக்கமாதல்வேண்டுமென்றும் நினைத்தற் கிடந்தருகின்றது.

மற்றும் அந்த நச்சினார்க்கினியரே "இக் காலங்கட்கு விதந்து ஒருபெயர்கூறாது வாளாகூறினர். அப்பெயர் உலகவழக்கமாய் அப்பொருள் உணாநிற்றலிற் கால உரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்க வோரைமுதலாகத் தண்மதிக்குரிய கர்க்கடகவோரையீறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாதலின் அதனை இம்முறையானே அறுவகைப் படுத்தி யிரண்டுதிங்கள் ஒருகாலமாக்கினர்" என்றுரைத்திருப்பதும் இக்குத் துணைசெய்கின்றது.



இதன்றியும் வடமொழி வர்ஷமென்பது கார்ப்பருவத்தையும் யாண்டையும் குறித்துநிற்பதும் இக் கருத்தை விளக்குகின்றது. "நீரின்றமையா துலகெனின் யார்யார்க்கும், வானின் றமையா தொழுக்கு" என்ற வள்ளுவனாரது வாய்மைக்கேற்ப உலகவாழ்க்கைக் கின்றியமையாத மழையுடையது வர்ஷரிதுவே (கார்ப்பருவமே); ஆதலால் அக்காலத்தின் சிறப்புநோக்கியே வருஷமென்று வடநூலார் அக்கார்ப்பருவப்பெயராலேயே யாண்டையும் குறித்தனர்போலும்.

இவைகளேயன்றி இதனை நிறுவுதற்குரிய பிரசான்றுகளும் இருக்கின்றன. நாம் தொடங்குஞ்செயலுக்கெல்லாம் காப்பாக முதலில் விநாயகரை வணங்குவது நம்மனோரியல்பு. அவ்விநாயகவணக்கமாக அமைந்த விநாயகபூசையும் கார்ப்பருவத்திலேயேயாதலின் ஓராண்டளவும் நாம் செய்யுந்தொழிலனைத்திலுக்கும் காப்பாய இதனை யாண்டின்தொடக்கத் தியற்றிவந்தனர் என்றுரைப்பதும் தவறாகாது. மற்றும் மறையோரெல்லாம் மறையோதத்தொடங்குவதும் (ஆவணி அவிட்டம் சிராவணம்) கலைகளின் கடவுளாகிய கலைமகளை வழிபடுவதும் இக்கருத்திற்கே துணைசெய்யும். கொல்லம் ஆண்டு ஆவணியிலிருந்து தொடங்குவதும் இப்பழக்கத்தைத்தழுவியதேயாகுமென்று கருதற்கும் இடமளிக்கின்றது.

இக்கார்காலமேயன்றி, சரத் (கூதிர்) காலமும் ஒருகாலத்து யாண்டின்தொடக்கமாகக் கொள்ளப்பட்டிருக்கவேண்டுமென்றும் தோன்றுகின்றது. இக்கருத்துக்கும் நச்சினார்க்கினியரது உரை ஒருவாறு சிறிது உதவிசெய்கின்றது. "புணர்தலின்றி இல்லறம் நிகழாமையிற் புணர்தற் பொருட்டாகிய குறிஞ்சியை அதன்பின்வைத்தார்" என்ற அவரது உரையைச் சிறிது சிந்திப்போமாயின் குறிஞ்சியே மற்றெல்லாத்திணைக்கும் காரணமாதலின் அக்குறிஞ்சிக்குரிய சரத் (கூதிர்) காலமும் முதலெனக் கொள்ளப்படுவதிற் குறையொன்றுமின்றாம்.

மேலும் புறப்பொருளின் கூதிர்ப்பாசறை என்ற துறை 'கூற்றனையான் வியன்கட்டூர்க், கூதிர்வான் றுளிவழங்க, வாற்றாமை நனிபெருகவும் அயில்வேலோன் அளிசிறந்த—மனைக்கிழத்தியின் பிரிவிற் கிரங்குதலொழிந்த — செய்தியையுரைப்பதிலிருந்தும் இத்தகைய பிறவற்றிலிருந்தும் கார்காலம் முழுவதும் இல்லிருந்து நல்லறம்புரிந்து ஒருவன்

மழை ஓய்ந்ததும் மறுவருஷத்துக்குத் தான் தேடவேண்டிய பொருள் புகழ் முதலியனகுறித் தெழுந்தகுதியுடையது, கூதிர்காலமே என் றேற்படுகின்றது. கவிச்சக்கிரவர்த்தியாகிய காளிதாசனும் ரகுவம்சம் 4ஆவதுசருக்கத்தில் சாத் (கூதிர்) காலம் யுத்தயாத்திரையின்பொருட்டேவியது என்கின்றனன். ஆகவே மழை ஓய்ந்ததும் அவரவர் தங்கள் தங்களுடைய தொழில்களைத் தடையின்றி ஈடேற்றும்வகை துணைசெய்தற்குச் சாத்காலமே முதன்மையாகியதாதலின் அப்பருவம் முதலாகவே யாண்டைக் கணக்கிட்டனர் என்றுரைப்பதும் பிழையாகாது. வடநாட்டார் புதுக்கணக்கிடும் முறையும் இதனை வலியுறுத்தும். அன்றியும் வேதவழக்கிற் சாத்தென்பது யாண்டென்னும் பொருளிற் பெருவரவினதாகக் காணப்படுகின்றது. "நந்தாம சாத:சதம்" முதலியபலவிடங்களுண்டு. இக்குறிப்புக்களெல்லாஞ் 'சாத்' அதாவது 'கூதிர்காலத்திலிருந்து தொடங்கிய யாண்டுக்கணக்கு, 'வர்ஷ' அதாவது கார்காலத்துக்கு மாற்றப்பட்டிருக்கவேண்டுமென்றும், அது தமிழ்நாட்டிற் கார்காலத்திலே நிலைபெற்றிருக்கவேண்டுமென்றும் தோற்றுவிக்கின்றன. இக்கருத்தொடுபடுமிடத்துக் கலைமகள்வணக்கமாகிய சரஸ்வதிபூஜையை யாண்டு முழுவதும் தாம் கற்றகல்வியின் திறமையைப்பற்றிப் பலாறியக்காட்டு மொருகாலமாகக்கொண்டிருந்ததாக ஏற்படும். இக்காலத்தில் நவராத்திரி விஜயதசமிகளின் கொண்டாட்டமும் அக்கருத்தே தோற்றுவிக்கின்றது. ஆயினும் அவ்வருஷாரம்பம் கார்காலத்திலேயே நிலைபெற்றிருப்பதிலிருந்து நம்முன்னோர் இல்லிருந்து நல்லறஞ்செய்தலே ஏற்றமுடையதென்று கருதியமை தெரியலாம்.

இவ்வருஷாரம்பம் இங்கிருந்து சித்திரைக்கு மாறியது என்னையெனின் வேள்விகளை விரித்துரைக்கும் யஜுர்வேதம் 'வசந்தம்' அதாவது 'இளவேனிற்'காலத்தை வேள்விக்குரிய காலமாக வகுக்கின்றது. அவ்வசந்தமும் இன்னதென உரைக்குமிடத்துப் பங்குனிப்பூரணையின் அடுத்தநாளும் யாண்டின்தொடக்கமாகலாமென்று யாண்டின் தோற்றுவாயையும் சித்திரைக்கு மாற்றுகின்றது. இம்மாற்றத்தில் ஓரளவு நியாயமும் இருக்கின்றது. கதிரவனது கதிர்நோக்கி யாண்டைக் கணக்கிட்ட நம்முன்னோர் அவன் நமக்கு நேராகச் செல்லுங் காலங்களுள் ஒன்றாகிய ஐப்பசியை வருடத்திற்கு ஆரம்பமாகக் கொண்டனர். கூதிர்



காலத்தின் அம்முதன்மை பின்பு ஒழுக்கச்சீர்திருத்த மேற்பட்ட காலத்தில் கார்காலத்திற்கு மாறிவிட்டது. மேல் வேள்வியின்சிறப்பு மல்கிய மற்றொருகாலத்து அம்முதன்மை இளவேனிற்காலத்திற்கு மாற்றப்பட்டது. அவ்விளவேனிலும் கதிரவன் நமக்குநேரே செல்லுங்காலங்களு ளொன்றாதலின் அம்மாற்றமும் தக்கதே என யாவராலும் மதிக்கப்பட்டது. கதிரவனது செலவும் ஐப்பசியில் முகிலால் மறைக்கப்பட்டு நன்கு காணப்பெறுமையின் சித்திரையே அதற்கு ஏற்றதொரு காலமாகவும் ஆகியது. அவ்விடத்தும் சாந்திரமானம் குறைபாடுடையதாகத் தோன்றவே மேடமும் கதிரவனும் ஒன்றுசேரக்கூடியதொருகாலத்தையே நாம் வருஷாரம்பமாகக்கொண்டிருக்கின்றோம்.

## முடிவுரை.

ஈண்டுரைத்தவாற்றாற் காலத்தினியல்புதா னின்னதென்பதும், அக்காலத்தினிடத்து நாள்முதலிய பாகுபாடெல்லாம் இயற்கையமைப்பை ஒட்டி நமது வழக்கிற்காக நம்மாற் கற்பித்துக்கொள்ளப்பட்ட வெறுந்தோற்றமே என்பதும் ஒருவா றுணரலாம். இவ்வுணர்வுதான் என்னபயத்ததோவெனின், 'எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு', 'இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி, மாசறு காட்சி யவர்க்கு' (குறள். 355, 352) என்ற மறைமொழிகள் உண்மையறிவுதா னின்னதென்பதையும் அவ்வுண்மையறிவும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத தென்பதையும் தெளிந்த வறிவுடையார்க்கே நிலைத்த இன்பங் கைக்கூடுமென்பதையும் விளக்கியிருத்தலின் நாம் உலகியற்பொருள்களி னொவ்வொன்றையும் ஆராய்ந்தறிவது இன்றியமையாததாயிற்று. இவ்வுலகியற்பொருள்களெல்லாம் திரவியம் குணம் கர்மம் சாமானியம் விசேடம் சமவாயம் அபாவம் என்ற வெழுகூறாக்கி அவற்றினியல்புகூறும் தருக்கநூலோரும் காலத்தை ஒரு திரவியமென்றனர். ஆகவே காலமென்னும் பொருள்பற்றி உண்மைநிலையுணர்வதும் வேண்டப்படுவதொன்றாயிற்று. அத்தருக்கநூற்பயன் கூறுமிடத்தவர் உலகியற்பொருளனைத்து முள்ளவாறுணர்ந்தபின்பே

இவையனைத்திலும் வேறானது மெய்ப்பொருளென்றுணர்வதும் அத
னிடத்துண்டாகிய மெய்யுணர்வு நிலைத்திருப்பதும் கைவரப்பெறு
மென்று மறைமொழிமேற்கோள்காட்டி நிலைநாட்டியிருக்கின்றனர். அவ்
வாறு நாம் மெய்ப்பொருளுணர்ச்சிபெறச் செல்லுகின்றவிடத்துக் காலத்
தின் உண்மையும் காண்ப தின்பம்பயப்பதாயவோர் நெறியாகின்றதென்
பது சொல்லாமலே அமையும். இவ்வுண்மைப்பொருளறியும் பணியிற்
சிறிதளவேனு மாற்றப்பெற்றதெனக்கொள்வார் கொள்க.

இன்றேல் நம்முன்னோர் அடைந்திருந்த தெளிவுநோக்கிப் பிறநாடு
களில் நாகரிகம் இன்னதென்றுமறிந்திராதகாலத்திலேயே (பல்லாயிரவரு
டங்கட்குமுன்பே) நமது தமிழ்மக்கள் சிறந்தநாகரிகமும் தெளிந்த அறி
வும் படைத்தவர்களாகத்திகழ்ந்தனர் என்றறிந் தகமகிழ்வார் மகிழ்க.

அதனையும் விரும்பிலரேல், நம்முன்னோ ரிவ்வளவு சிறந்த நாகரிக
மும் தெளிந்த அறிவும் படைத்திருந்தும் இப்பொழுது நாம் பேதை
யரைப்போற் பிறர்கையைப்பார்த்தவண்ணம அவர் நமக் கொன்றும் தந்
திலரே என்றேங்கியிருப்பதும் நமது குறைவேயன்றோ? என்று நம் முன்
னோரடைந்திருந்தநிலையினும் மேலானநிலையைப் பிறநாட்டினரினும் உயர்
வானநிலையை—அடைதற்கு நாம் முயலல்வேண்டுமென உழைப்பா
ருழைக்க. எவ்வகையிலேனும் இச் சிறுபணிதான் அனைவர்க்கும் பயன்
படுவதாகுமாயின் அஃதே யாம் பெறத்தரும் பேறாகுமென்பது துணிபு.
இறைவனும் அவ்வாறே அருள்புரிவானாக.

---

மஹாமஹோபாத்தியாய டாக்டர்

## உ. வே. சாமிநாதையரவர்களின்

## 80-ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்து.

பண்புயர்ந்த வேதியராம் பண்டிதரே இன்றமக்கோர்
எண்பதாம் ஆண்டு நிறை வெய்தியதே—கண்பரந்த
வையகத்தி லும்புகழோ மாமலையின் மேல்விளக்காய்ச்
செய்யவொளி வீசிநிக சென்று. (1)

ஆயிரத்தெண் ணூறுகழிந் தைம்பத்தைந் தாண்டினிலே
மாயிரு ஞாலத்தே வந்துதித்தோய்—தூயதமிழ்த்
தொண்டிற் சிறந்த சுவாமிநா தப்பெரியோய்
எண்டிசையும் நின்சீ ரினிது. (2)

உத்தம தானபுர மூர்ப்பெயரைக் கேட்டக்கால்
உத்தமரை யீன்றெடுக்கு மூரதுவே—உத்தமராம்
தந்தைக் குகந்த தனயனா வந்தனையால்
வந்தித்துக் கூறுதுமே வாழ்த்து. (3)

வேங்கடசுப் பையரெனும் வேதியர்செய் நற்றவத்தால்
பாங்குடனே வந்துதித்த பண்பனே—ஈங்குதமிழ்
நாட்டிற்கு நீபுரிந்த நற்பணியைத் தான்வரைய
வேட்டிலுங் காணா திடம். (4)

மணிமே கலைபதிற்றுப் பத்துயர்ந்த சிந்தா
மணியுஞ் சிலப்பதிகா ரத்தோ—டணிவித்தாய்
ஐங்குறு நூறும் புறப்பொருளும் பத்துப்பாட்
டிங்கிதமா கப்பதித்தா யீண்டு. (5)

பற்பலவாம் பட்டங்கள் பாரிற் பலர்வழங்க
நற்புலமை யோடிருக்கு நாதனே—சொற்புலமை
மிக்கவா மேதினியில் வேறொருவ ரொப்பில்லாத்
தக்கவா வாழியநீ தான். (6)

வித்துவ சிரோமணியாம் மீனாட்சி சுந்தரன்பால்
உத்தம சீடனென வுற்றிருந்து—வித்தையெலாம்
பற்றுடனே கற்றறிந்த பாவலா! நாவலா!
மற்று யா ருன்னை நிகர் வார் (7)

தொ. ரா. ப.

மஹாமஹோபாத்தியாய டாக்டர்
உ. வே. சுவாமிநாதையரிடமிருந்து
கிடைத்த பதிலின் நகல்.

TYAGARAJA VILAS,
Tiruvettiswaranpet,
Triplicane, 23—3—1935.

அன்புள்ள ஐயா,

தாங்கள் அன்புடன் அனுப்பிய வாழ்த்துப்பாக்கள் வந்தன.

தங்கள் அன்புடைமையை மிகவும் பாராட்டுகின்றேன்.

தங்களைப்பற்றிய முழுவிவரம் தெரியாமையால் முன்னமே பதில் அனுப்பக்கூடவில்லை. இப்போதுதான் மகா-ா-ா-ஸ்ரீ ஹரிஹரஐயரவர்களால் தெரிந்தது.

அந்தப்பக்கம் வந்தால் பார்க்கிறேன்.

இங்ஙனம்
அன்புள்ள,
(ஒப்பம்.) வே. சாமிநாதையர்.
(True copy.)
T. R. P.

---

## பாராட்டு.

சீர்மேவு தமிழ்ச்சங்க நூல்கள் சாலத்
திருந்திடவிந் நாளெங்குந் திகழச் செய்து
பார்மேவு மொளிபெற்றான் பலநூ லாய்ந்த
பண்டிதரும் பாமரரும் பரிவிற் போற்ற
நார்மேவு நலமலிந்தான் புலவ ரேத்தும்
நாமகளே நமதுதவப் பேறாய்த் தந்த
தார்மேவு தமிழ்விசயன் சாமி நாதன்
தமருடனே சதவாண்டு நிறைந்தான் வாழி.

கே. ஹி. சேஷையர்,
6. III. 35
(திருவனந்தபுரம்.)

---

உ

கலைசைக் கோவைச்

# செய்யுண் முதற்குறிப்பகராதி

[எண் - பக்கஎண்.]


| | | | | | |
|---|---|---|---|---|---|
| அக்கணப்பன் | 36 | ஆடியபாதர் | 28 | இளங்காளை | 47 |
| அக்காதரமொழித் | 122 | ஆடுங்கொலோ | 17 | இன்னுவொழிக்குங் | 83 |
| அகத்தார்க்கரியர் | 95 | ஆண்டகையார் | 45 | ஈட்டறம் | 18 |
| அஞ்சத்தனப்பர் | 96 | ஆதிநடேசர் | 66 | உடுக்குங்கலைகன் | 24 |
| அஞ்சானனங் | 109 | ஆமேவுபாலனையார் | 118 | உண்டோர்புதுமணம் | 21 |
| அடலேறதேறங் | 33 | ஆராமஞ்சூழ்ந்த | 23 | உத்தமர்போற்றங் | 103 |
| அடியார்க்கருளுஞ் | 54 | ஆரியரெங்கள் | 110 | உருக்கோவை | 1 |
| அண்டர் | 29 | ஆலைக்கழனி | 30 | உலகாளமைந்தன் | 112 |
| அணங்கமர்மாட | 83 | ஆவிணஞ்சேற்குங் | 123 | உலைவுற்றசாலன்னை | 62 |
| அத்தலையோரிரு | 124 | ஆழிப்புரிசை | 61 | உற்றூர்கள்வந்து | 103 |
| அத்திநிசாசரர் | 122 | ஆளாவெனைக்கொள் | 16 | ஊரார்சொற்றீமை | 101 |
| அதிர்ந்திமொழி | 83 | ஆனந்தக்கூத்தர் | 91 | ஊருவரத்தழை | 40 |
| அந்தமிழின்சுவை | 106 | ஆனேறமையர் | 21 | எங்களைகண் | 19 |
| அந்நாட்கலைசைத் | 111 | இக்கோவிருந்த | 12 | எடுத்தசிற்றில்லுங் | 48 |
| அப்பேறசென்னிக் | 55 | இகலிருணீக்கு | 116 | எம்பாவையேற்குங் | 20 |
| அம்மனையானவர் | 62 | இச்சிக்குமன்ன | 67 | எம்மின்னல் | 102 |
| அரக்கவிராம்பல் | 29 | இச்சைவநாதர் | 117 | எல்லாந்தெரிக்கு | 34 |
| அரணங்கள்சூழ் | 42 | இடங்கரநேகம் | 53 | எல்லாரும்போற்றுங் | 54 |
| அருக்கத்திபூண்ட | 9 | இடாரவதொன் | 75 | எவ்வழியுஞ்சுழன் | 25 |
| அருத்தியினீங்கி | 62 | இடையற்றகல்வி | 121 | எழுங்காதல்கூர | 101 |
| அருவன்றியேயு | 24 | இண்டைச்சடையர் | 114 | எற்பகலாளி | 69 |
| அருளுங்கலைசைத் | 22 | இணங்குமன்றே | 60 | என்னுன்வியப்பல் | 68 |
| அருளோடுவாழுங் | 73 | இத்திருவின்பொருட் | 43 | எனைப்பாதுகாக்குங் | 72 |
| அரையொன்றுநாகர் | 26 | இதம்புரி | 85 | எனையும்வந்தாண்ட | 81 |
| அரைவாயரவர் | 96 | இதைக்குறவேலிக் | 30 | ஏகனேகன் | 107 |
| அல்லாருங்கண்டர் | 108 | இந்தனஞ்சோறி | 80 | ஏட்டையைநீக்குங் | 27 |
| அலைமேல்வருமங்கை | 40 | இந்துறைமாடக் | 14 | ஏத்துமெய்யன்புடை | 69 |
| அவ்வனற்பழனக் | 79 | இப்போறிவிவட் | 84 | ஏந்தண்ணல்வேல | 51 |
| அளிக்குங்கண்ணுளர் | 38 | இம்மாதுநீயும் | 93 | ஏறும்புகழ் | 46 |
| அற்புதக்கூத்தர் | 106 | இரவலரம்பிறை | 125 | ஒருகயந்தள்ளி | 94 |
| அறவாணர்வாழுங் | 55 | இரவோர்க்குதவு | 66 | ஒருகாரணமுண்டு | 73 |
| அன்றிலம்பிள்ளை | 34 | இரும்புவிபோற்றங் | 47 | ஒருகாலகாலர் | 51 |
| அன்னின்றகண்டர் | 65 | இலலத்தமாரும் | 76 | ஒருகேடில்கொம்பர் | 119 |
| அன்னையொப்பான | 9 | இலக்கணமாடக் | 53 | ஒருதாதவைமுன் | 120 |
| அனம்போனடைச்சி | 86 | இலவாரிதழி | 63 | ஒருப்பாடுடன் | 63 |
| ஆசையுண்டேல் | 126 | இவருக்கணியும் | 64 | ஒருவாவிருதலை | 79 |
| ஆடல்வைவே | 111 | இவருடையாருயிர் | 87 | ஒறுத்தார்க்கொரு | 115 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒன்றாந்தாரதவர் | 13 | காவும்பர்பம்பும் | 110 | சீதக்கமலத் | 15 |
| ஓங்கற்சிலையர் | 3 | காளிதன்கேள்வர் | 107 | சீர்க்குன்றனைய | 72 |
| ஓங்காரரூபர் | 109 | காற்றயிலுகர் | 26 | சீரின்பாப்புடை | 7 |
| ஓங்குங்கலைசைத் | 56 | கும்பங்கொடுத்த | 126 | சீறூடரவம் | 70 |
| ஓராட்டிபாகர் | 94 | குயிலேயனையசொற் | 52 | சுடர்ப்பாலைவன்னி | 89 |
| கங்காளவேடர் | 57 | குயின்றூறு | 71 | சுத்தங்கொடுக்கும் | 9 |
| கங்கைச்சடையர் | 103 | குருமணியன்ன | 87 | சுராதிபர்போற்றங் | 49 |
| கட்டாரழலையைக் | 31 | குருவாய்வர் | 101 | சுற்றம்பரிசனத் | 40 |
| கட்டாரியாதி | 125 | குழைவிட்டகாதர் | 50 | சூடக்கண்டாய் | 2 |
| கடல்வண்ணன் | 112 | குறப்பேதையர்க்கு | 59 | சூடகக்காந்தண் | 10 |
| கடுத்தார்மனம் | 93 | குன்றேவிற்கொண்ட | 58 | செங்கேழ்தழி | 28 |
| கண்டகங்கொண் | 100 | குனித்தருள்கூத்தும் | 71 | செங்கையிலாடுங் | 112 |
| கதிக்கன்பர்தேடுங் | 72 | கூசாமலேதிலன் | 99 | செஞ்சரணன்பர்க் | 27 |
| கதிரார்கணிச்சிக் | 54 | கூடாதவெம்பகை | 128 | செண்டாடு | 5 |
| கம்மூர்கண் | 9 | கைப்பாகும் | 40 | செப்பனைவோர்களுங் | 39 |
| கம்மேகவண்ணனுங் | 99 | கோப்பிடுமெஞ்செவிப் | 35 | செம்பார்களிம்பெனச் | 8 |
| கயத்தாந்தெவ்வலர் | 55 | கொய்யுமலர்ச்சுனை | 59 | செம்மேனியப்பர் | 118 |
| கரத்திற்கபாலர் | 95 | கொவ்வைகொள் | 61 | செய்யகத்தே | 68 |
| கருத்தம்பி | 70 | கொழிவான | 64 | செய்யாமொழியர் | 56 |
| கருகட்டகண்டர் | 46 | கோட்டாலமர்ந்த | 61 | செருத்துணையாய் | 125 |
| கருப்பாலையார்க்கும் | 41 | கோதைத்தவிர்க்கும் | 89 | செவ்வாய்தனக்கு | 55 |
| கரும்புள் | 116 | கோவுந்தனமு | 117 | செவ்வேலையைத்து | 61 |
| கல்லாரக்கண்ணி | 37 | சுகாதரெங்கள் | 105 | செழுந்தேஞ்சிகழிகை | 58 |
| கல்லாரவாவி | 14 | சங்கத்திலோர் | 80 | செழுமைமகந்தாத | 74 |
| கல்லாலரெங்கள் | 50 | சங்கதிர்வாவிக் | 48 | செறியாரபார | 66 |
| கலுழங்கைக் | 119 | சங்குலம்போடைக் | 50 | செறியும்பசும்பொழில் | 7 |
| கலைப்பாவலர்சூழ் | 112 | சங்கையிலா | 89 | செறுமாமதக்களிறு | 48 |
| கள்ளார்க்குவதர் | 89 | சசியார்புரிசை | 91 | சேகாந்தருக்கள் | 5 |
| களக்கத்தரசெங் | 67 | சடைகெடுமேலி | 44 | சேணுற்றமாடங்கள் | 13 |
| களியானைத்தோலர் | 35 | சரமேவிழிக்குஞ் | 17 | சேணேறபொன் | 64 |
| கற்றவர்வாழும் | 69 | சரியாங்கறிங்குதம் | 56 | சேலொடுவெண்டனை | 28 |
| கற்றிலகண்கள் | 35 | சற்றிடம்யான் | 17 | சேற்றம்புயத் | 18 |
| கனக்கறைக்கண்டர் | 84 | சிங்கம்பிடிக்க | 8 | சொல்லரிக்காடும் | 65 |
| காசினின்மென்மைக் | 33 | சிங்கியங்கண்டர் | 25 | தகட்டிதழ்க் | 10 |
| காணினுங்கேட்கி | 90 | சித்தாங்கலைசை | 60 | தங்கச்சிலையர் | 115 |
| காதார்குழையர் | 9 | சிதம்பர்க்கரியர் | 114 | தங்காப்பு | 86 |
| காமனைக்காய்ந்த | 10 | சிந்திக்குகேரும் | 63 | தண்டகாரடர் | 42 |
| காயவெள்ளம் | 11 | சிலைக்கேயொப்பாம் | 21 | தண்ணூர்பதங்கம் | 90 |
| காயிலைச்சூலர் | 85 | சிலைவளையாழி | 52 | தண்ணுறருடும் | 108 |
| கார்மாதை | 23 | சிவங்காட்டிய | 82 | தண்ணுறவாயுமிவ் | 18 |
| கார்வாழுங்கண்டர் | 74 | சிவமுதலாந்தென் | 107 | தத்துவக்கூட்டம் | 100 |
| காரம்பிரிவர் | 15 | சிவையொருபாகர் | 12 | தமக்காருகேரில் | 117 |
| காராருங்கண்டர் | 20 | சிற்பத்திற்செய்த | 7 | தனவேந்தர் | 5 |
| காவாமற்காக்கும் | 25 | சிற்பாணுரொஞ் | 20 | தன்கையிற்கங்கொள் | 82 |
